# பாவை தந்த (திருப்)பாவை

**ந.ஜெயக்கொடி**
முனைவர் பட்ட ஆய்வாளர், விஷன் பார் விஸ்டம், ஆழியார்

**முனைவர் எஸ். பிரசாத்**
அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

வைணவ சமய பக்தி இலக்கியமான நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்குத் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி ஆகிய இரண்டு நூல்களைப் பாவை ஆண்டாள் அருளிச் செய்திருக்கிறார். பன்னிரு ஆழ்வார்களில் ஆண்டாள் மட்டும் பெண் பக்தராக இருந்தார். .திருப்பாவையில் முப்பது பாசுரங்கள் உள்ளன. திருப்பாவைப் பாசுரங்களைப் பாடி பக்தியுணர்வுடன் மார்கழி மாதம் முழுவதும் பாவைநோன்பு நோற்கும்போது வேண்டியது நிறைவேறும் என்பது ஐதீகம். முப்பது பாசுரங்களும் போற்றத்தக்க மேன்மை உடையவை. அதில் மூன்றாவது பாசுரத்திலுள்ள சிறப்புகளை இவ்வாய்வில் காண்போம்.

## ஆண்டாள்

வைணவ பக்தி இலக்கியத்தில் தனக்கெனத் தனி இடத்தைப்பெற்று என்றும் அழியாப் புகழோடும் சிறப்போடும் ஆண்டாள் திகழ்கிறார். அவரது பிறப்பு மட்டுமின்றி மறைவும் வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளது. கண்ணனிடம் மையல் கொண்டு அழகிய சொல்லோவியங்களை ஆண்டாள் தம் இனிய பாசுரங்களில் தீட்டியுள்ளார். அவர் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகளாகக் கருதப்படுகிறார். ஸ்ரீவில்லிபுத்தூரில் திருமாலுக்கு மாலை தொடுத்து கைங்கரியம் செய்யும் பொருட்டு பெரியாழ்வார் நந்தவனம் ஒன்றை அமைத்திருந்தார். ஆடி மாதம் பூர நட்சத்திரத்தன்று காலைப்பொழுதில் மலர்களைப் பறித்துக் கொண்டிருந்தபோது துளசிச் செடியின் அடியில் பெரியாழ்வார் ஒரு பச்சிளம் பெண் குழந்தையைக் கண்டெடுத்தார். அவர் திருமணம் ஆகாதவராக இருந்ததால் இறைவன் தனக்கு அளித்த மகளாகக் கருதி அக்குழந்தையை சீரும் சிறப்புடன் வளர்த்து வந்தார். பூங்காவில் கண்டெத்ததால் பெரியாழ்வார் அவருக்குக் கோதை (மலர்க்கொத்து) என்று பெயர் சூட்டினார்.

பெரியாழ்வாரின் ஆசிரமத்தில் பரவியிருந்த பக்திமயமான சூழலில் கோதையின் உள்ளத்தில் திருமால் மீது பக்தியும் அன்பும் ஏற்பட்டது. திருமாலின் அழகையும் வலிமையையும் அவரது திருலீலைகளையும் தமது வளர்ப்புத் தந்தையான பெரியாழ்வாரிடம் கேட்டு மிக்க இன்புற்றார். நாளடைவில் அந்த பக்தி அரங்கன் மீது அழியாக் காதலாக மாறியது. திருமாலுக்குச் சமர்ப்பிப்பதற்காக நந்தவனத்தில் பூப்பறிப்பதிலும் மாலை கட்டுவதிலும் ஆண்டாள் பெரியாழ்வாருக்கு

உதவி செய்துவந்தார். அரங்கன் மீது வைத்திருந்த மையலின் காரணமாக அவரையே மணப்பது என்ற உறுதியுடன் இருந்தார்.

பெரியாழ்வார் இறைவனுக்காகக் கட்டி வைத்திருந்த மாலைகளையும் பூச்சரங்களையும் தன் தந்தை இல்லாத நேரங்களில் தான் சூடிக்கொண்டு அரங்கனுக்குத் தான் பொருத்தமான அழகுடையவளா? என்று கண்ணாடி முன் நின்று எண்ணிப்பார்ப்பதை வழக்கமாகக் கொண்டார்.

ஒருநாள் பெரியாழ்வார் இதைக்கண்டு மனம் வருந்தி கோதையைக் கடிந்து கொண்டதல்லாமல் அவள் சூடி வைத்த மாலையை திருமாலுக்கு அனுப்பவில்லை. புதிதாக வேறொரு மாலை கட்டி அனுப்பினார். அன்று இரவு இதையே நினைத்து கவலையுடன் தூங்கியிருந்த போது வடபத்ரசாயி பெரியாழ்வார் கனவில் தோன்றி மாலையை கோதை சூடிக் கொண்ட பிறகு தனக்கு சமர்ப்பிப்பதற்காக அனுப்புவதைத் தான் முழுமனதுடன் ஏற்றுக் கொள்வதாகக் கூறி மறைந்தார். அன்று முதல் கோதை, ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ என்று அழைக்கப்படலானாள். அவர் சூடிக்கொடுத்த மாலையை பெருமாள் ஏற்று அணிந்து கொண்டதால் அவரை இலக்குமியின் அவதாரமாகக் கருதினார் பெரியாழ்வார். அதுமுதல் கோதை ‘ஆண்டாள்’ என அழைக்கப்பட்டார். இன்றும் ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து ஆண்டாள் திருவுருவத்திற்கு சூட்டிய மாலைகள் அழகர்கோவில் சித்திரைத் திருவிழாவிற்கும் திருப்பதியில் நடக்கும் புரட்டாசி பிரம்மோத்துவத்திற்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

ஆண்டாள் திருமணப் பருவத்தை அடைந்ததும் பெரியாழ்வார் அவளுக்கேற்ற வரனைத் தேடத் தொடங்கினார். நல்ல வரன் கிடைக்காததால் அவர் மிகவும் வருத்தமுற்றார். தனது தந்தையாரின் துயரத்திற்கான காரணத்தை அறிந்து ஆண்டாள் அவரிடம் தெளிவாகக் கூறினார். நான் ஸ்ரீரங்கத்தில் குடிகொண்டிருக்கும் பகவான் அரங்கனையே என் கணவனாக அடையவிரும்புகிறேன். மற்ற மானிடர் எவருக்கேனும் என்னைத் திருமணம் செய்து வைத்தால் நான் என் உயிரை மாய்த்துக் கொள்வேன் என்றார்..

அன்றிரவே பகவான் அரங்கநாதர் பெரியாழ்வார் கனவில் தோன்றி கோதையை அலங்கரித்து ஸ்ரீரங்கத்திற்கு அழைத்து வருமாறும் நான் அவளை மணந்து கொள்வேன் என்றும் கூறி மறைந்தார். அரங்கனுக்கும் தனக்கும் திருமணம் நடப்பதாக தான் கண்ட கனவை கோதை தன் தோழிகளிடம் “வாரணமாயிரம் சூழ வலம் செய்து தோரணம் நாட்ட கனாக்கண்டேன் தோழி நான்” என்ற பாடல் மூலம் தெரிவிக்கிறார்.

அரங்கனின் ஆணைப்படி மங்கள வாத்தியங்கள் முழங்க தொண்டர் குழாமுடன் பெரியாழ்வார் ஆண்டாளை அழைத்துக் கொண்டு திருவரங்கம் சென்று சாத்திர முறைப்படி திருமணம் செய்து வைத்து ஆண்டாளை அரங்கனுக்குச் சமர்ப்பித்தார். கர்ப்பகிரகத்தில் நுழைந்து பாம்புப் படுக்கையின் மீது ஆண்டாள் ஏறியதும் அங்கு தோன்றிய தெய்விக ஒளியில் ஆண்டாள் இரண்டறக் கலந்து விட்டாள் என வரலாறு கூறுகிறது.

**திருப்பாவை**

ஆண்டாள் பெரிய பக்தை மட்டுமல்லாமல் சிறந்த கவிஞராகவும் இருந்தார். இவருடைய படைப்புகள் இந்திய வைணவ இலக்கியத்திற்கு பெருமை சேர்ப்பதாகும். திருப்பாவை, நாச்சியார் திருமொழி இவ்விரண்டு நூல்களும் ஆண்டாளுடைய படைப்புகளாகும்.

திருப்பாவையில் மொத்தம் 30 பாசுரங்கள் உள்ளன. இராக தாளங்களுடன் அவைகள் பாடத்தக்கவைகளாகும். இப்பாசுரங்களில் தமிழ் சமுதாயத்தின் புகழ்பெற்ற மார்கழி நோன்பு வருணிக்கப்பட்டுள்ளது. தமிழ் மாதங்களில் சிறந்த மாதமாகக் கருதப்படும் மார்கழி மாதத்தில் இளம்பெண்கள் சிறந்த மணவாளனை அடையும் பொருட்டு பாவைநோன்பு விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

திருப்பாவைப் பாடல்களில், ஆண்டாளின் ஒப்பற்ற பக்திபாவமும் அந்தக் காலத்து கிராம மக்களின் வாழ்க்கையைப் பற்றிய உயிரோட்டமுள்ள ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன. பாடலில் அமைந்திருக்கும் இயற்கை வருணனை போற்றத்தக்கதாகும். வைணவ ஆலயங்களிலும் வைணவ பக்தர்களின் இல்லங்களிலும் மார்கழி மாதத்தின் முப்பது நாட்களிலும் திருப்பாவைப் பாடல்கள் பக்திசிரத்தையுடன் பாடப்படுகின்றன.

அஞ்ஞானத்தில் இருப்பவர்களுக்கு ஞானம் ஊட்டி இறைவனுடன் கலந்து பேரின்பம் அனுபவிக்கச் செய்வதை விளக்குவதாக திருப்பாவை என்னும் நூல் அமைந்துள்ளது. கற்பனை அழகும் கவிதைநயமும் ஒருங்கே அமையப்பெற்ற ஒப்பற்ற நூலாக திருப்பாவை விளங்குகிறது. ஆண்டாள் எழுதிய பாசுரங்களின் தாக்கத்தை தமிழ்நாட்டு வைணவ மக்களின் வாழ்க்கையில் காணமுடிகிறது.

**திருப்பாவையின் மூன்றாவது பாசுரம்**

**“ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி**
**நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்**
**தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து**
**ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள**
**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.”**

நாலாயிர திவ்யப் பிரபந்த பாசுரங்கள் அனைத்தும் பண்ணோடு பாடுதற்குரிய வகையில் அமைத்துள்ளன. இப்பாசுரம் பந்துவராளி ராகத்திலும் திரிபுடைத் தாளத்திலும் அமைந்துள்ளது.

**வாமன அவதாரம்**

மூன்றாவது பாசுரத்தின் முதலடியில் திருமாலின் வாமன அவதாரம் போற்றிப் பாடப்பட்டுள்ளது. "பரம்பொருளான இறைவன் தன் பேரருளை உயிர்கள் கண்டு கொள்ளும் பொருட்டு பூவுலகில் வந்து பிறப்பெடுக்கிறார். பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்பன இறைவனின் ஐவகை நிலைகளைக் குறிப்பன. பரமபதத்தில் வீற்றிருப்பது பரத்துவ நிலையாகும். உலகங்களைக் காக்கும் பொருட்டும், தருமத்தை நிலைநாட்டும் பொருட்டும், அதர்மத்தை அழிக்கும் பொருட்டும் “ஸ்ரீமந் நாராயணன் மற்ற நான்கு வகையான அவதாரங்களை எடுக்கிறார்.” [1]இறைவன் எடுத்த பத்து அவதாரங்களில் வாமன அவதாரம் ஒன்று. இந்த அவதாரத்தில் குட்டையான உருவத்துடன் வந்து மகாபலியிடம் மூன்றடி மண் யாசகம் பெற்று, வானளவாக உயர்ந்து ஓர் அடியால் பூமியையும், இரண்டாவது அடியால் ஆகாயத்தையும் அளந்து மூன்றாவது அடியால் மகாபலியின் ஆணவத்தை அழித்து பாதாளத்திற்குச் செல்லுமாறு தலையில் அழுத்தினார் என்பது வாமன அவதார வரலாறு. “யாசகம் வாங்குமுன் கூனிக் குறுகியவர் தாம் விரும்பிய பொருளைப் பெற்றபின் நிமிர்ந்து பெருமிதத்துடன் செல்வது போல, யாசகம் கேட்டபோது குறுகி இருந்த மகாவி‘ணு உருவம், விரும்பியதைப் பெற்றவுடன் வானளாவி ஓங்கி வளர்ந்துவிட்டது. இதில் யாசகம் பெறுவதன் சிறுமையும், அதைக் கொடுப்பதில் உள்ள பெருமையும், அதை அடைவதில் உள்ள நீட்சியும் நன்கு எடுத்துக் காட்டப்படுகின்றன.”[2] உலகளந்த பெருமாள் என்ற திருப்பெயரில் திருக்கோயிலூரில் கோவில் உள்ளது.

**வளங்கள்**

‘ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி’ என்று பாசுரங்கள் பாடி பாவை நோன்பு நோற்கும் போது திங்கள் மும்மாரி பெய்யும். மழை பெய்யாமல் போகாமலும், பெய்து வெள்ளக்காடாக ஆகாமலும் இருக்க வேண்டும் என்பதால் ‘தீங்கின்றி’ என்ற பதம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒன்பது நாள் வெயில் பத்தாவது நாள் மழை என மும்மாரி மழை பெய்யும்போது, நெல் ஏராளமாய் விளையும். வயல்களில் கயல் மீன்கள் துள்ளும். புள்ளிகளை உடைய வண்டுகள் மலர்களில் மயங்கிக்

கிடக்கும். பசும்புல் ஏராளமாய்த் தின்றதால் பெரும்பசுக்கள் குடம்குடமாகப் பாலைத் தரும். அதனால் அப்பசுக்களை வள்ளல் என்கிறார் ஆண்டாள். இவையெல்லாம் அடுத்தடுத்த பாசுர வரிகளில் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்பாசுர வரிகள் இயற்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை ஒரு நாடகக் காட்சிகள் போல் வருணனை செய்திருக்கிறார் ஆண்டாள். நீர்வளம், நெல்வளம், பால்வளம் போன்ற வளங்கள் நாட்டில் நிறைந்திருக்க பெண்கள் பாவை நோன்பு நோற்க வேண்டியது அவசியம் என்ற கருத்து சமுதாய நலன் சார்ந்த நோக்கும் இருக்கிறது.

**நிறைவுரை**

ஆண்டாள் பாடிய திருப்பாவையில் மொத்தம் 30 பாசுரங்கள் உள்ளன. இராக தாளங்களுடன் அவைகள் பாடத்தக்கவைகளாக இருக்கின்றன. இப்பாசுரங்களில் தமிழ் சமுதாயத்தின் புகழ்பெற்ற மார்கழிநோன்பு வருணிக்கப்பட்டுள்ளது. தமிழ் மாதங்களில் சிறந்த மாதமாகக் கருதப்படும் மார்கழி மாதத்தில் இளம்பெண்கள் சிறந்த மணவாளனை அடையும் பொருட்டு பாவை நோன்பு விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

திருப்பாவைப் பாடல்களில் ஆண்டாளின் ஒப்பற்ற பக்திபாவமும் அந்தக் காலத்து கிராம மக்களின் வாழ்க்கையைப் பற்றிய உயிரோட்டமுள்ள ஓவியங்கள் காணக்கிடைக்கின்றன. பாடலில் அமைந்திருக்கும் இயற்கை வருணனை போற்றத்தக்கதாகும். வைணவ ஆலயங்களிலும் வைணவ பக்தர்களின் இல்லங்களிலும் மார்கழி மாதத்தின் முப்பது நாட்களிலும் திருப்பாவைப் பாடல்கள் பக்திசிரத்தையுடன் பாடப்படுகின்றன.

திருப்பாவையிலுள்ள மூன்றாவது பாசுரத்தில் பக்தியுணர்வும் சமுதாய நலச்சிந்தனையும் நிறைந்திருக்கின்றன. சொற்சுவையும் பொருட்சுவையும் நிறைந்துள்ளது. மனத்தூய்மையுடன் பாவைநோன்பு நோற்கும் போது தனிநபர் விருப்பம் நிறைவேறுகிறது. பக்தியுணர்வு மேம்படுகிறது. திருப்பாவையைப் பாடுவதால் கிடைக்கும் பாடற்பயனாக வேதபிரான் பட்டர் அருளிச் செய்தவை கீழ்கண்ட வரிகள்:

**“....பாதகங்கள் தீர்க்கும் பரமனடிகாட்டும்**
**வேதமனைத்துக்கும் வித்தாகும் - கோதைதமிழ்**
**ஐயைந்துமைந்தும் அறியாத மானிடரை**
**வையம் சுமப்பது வம்பு”[3]**

இதனால் திருப்பாவையின் மேன்மையும், மக்கள் பாடிப் பயன்பெற வேண்டியதன் அவசியமும் தெரிகிறது. (திருப்)பாவையைப் பாட பாரினில் வளங்கள் ஓங்கும்..

**துணைநூற் பட்டியல்**

1. விட்டல்தாஸ், கே.ஆர்., ஆழ்வார்களும் இந்திய வைணவ இலக்கியங்களும், பழனியப்பா பிரதர்ஸ் சென்னை 2012
2. சொக்கலிங்கம், சு. திருப்பாவை, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை 2009.
3. நித்யா நுஸந்தாநம், கிருஷ்ணமாச்சாரிய ஸ்வாமிகளால் பரிசோதிக்கப்பட்டது, பாலாஜி அண்டு கம்பெனி, சென்னை 1967.